www.freetnbooks.com

# அரையாண்டு தேர்வு - 2025

## சமூக அறிவியல்

வகுப்பு: **10**

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

I. கீழ்கண்ட அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 14×1=14

1. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டை சேர்ந்தவர்?
அ) பிரிட்டன் ஆ) பிரான்ஸ் இ) டச்சு ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

2. லத்தின் அமெரிக்காவுடன் "அண்டை நாடுகளுடன் நட்புறவு" என்னும் கொள்கையை கடைப்பிடித்து அமெரிக்க குடியரசு தலைவர் யார்?
அ) பிராங்க்ளின் D ரூஸ்வெல்ட் ஆ) ட்ருமன் இ) உட்ரோ வில்சன் ஈ) ஐசனோவர்

3. எந்த ஆண்டு வர்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது?
அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991

4. இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) கல்கத்தா ஈ) லக்னோ

5. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்?
அ) T. M. நாயர் ஆ) P. ரங்கையா இ) G. சுப்பிரமணியம் ஈ) G. A. நடேசன்

6. பாக் நீர்ச்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா —— ஐ இந்தியாவிடம் இருந்து பிரிக்கிறது.
அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் இ) இலங்கை ஈ) மாலத்தீவு

7. இந்தியாவில் தங்க இழைப்பயிர் என அழைக்கப்படுவது ——
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ——
அ) பெங்களூரு ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்

9. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் —— ஆகும்.
அ) ஆனைமுடி ஆ) தொட்டபெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்

10. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்ரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி

11. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர் ——
அ) குடியரசு தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

12. மாநில அமைச்சரவையின் தலைவர் ——
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

13. இந்தியா எப்போது டங்கள் திட்டத்தில் கையெழுத்திட்டது?
அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994

V. Kaviyarasu M.Sc., B.Ed., Dip in CS&EH ,
Thiruvannamalai District

14. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ——
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

II. எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (Q.No. 28 கட்டாய வினா). 10×2=20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
16. பொருளாதார பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது.
17. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
18. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
19. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது?
20. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.
21. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.
22. இந்திய வேளாண் பருவங்களைக் குறிப்பிடுக.
23. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

24. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக
25. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை?
26. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டம் பற்றி நீவீர் அறிவது யாது?
27. உலகமயமாதலின் வகைகளை எழுதுக.
28. தகவல் தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள் சிலவற்றை கூறுக.

**III. ஏதேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (Q.No.42 கட்டாய வினா.)** **10×5=50**

29. i) டானென்பர்க் போரில் —- பேரிழப்புகளுக்கு உள்ளானது.
ii) நிதிமசோதா குடியரசு தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது
iii) இடி மின்னல் நிலம் என்று அறிபப்படும் நாடு —- ஆகும்.
iv) —- ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
v) நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதறிடும் வசதிகள் தமிழ்நாட்டில் —- மாவட்டத்தை சுற்றி அமைந்துள்ளன.
30. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு செயல்பாடுகளை ஆய்வு செய்க.
31. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
32. வேறுபடுத்துக.
அ) மேற்கு கடற்கரை சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி
ஆ) அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்
காரணம் கூறுக: மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.
33. தமிழ்நாட்டில் உள்ள சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.
34. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
35. இந்தியாவில் உள்ள பருத்தி நெசவாலைகளின் பரவல் பற்றி எழுதுக.
36. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
37. அடிப்படை உரிமைகளை குறிப்பிடுக.
38. வெளியுறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படை காரணிகள் எவை?
39. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.
40. கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை கூறுக.
41. கீழ்காண்பவனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1940 வரையிலான ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிப்பிடுக.
42. கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்
i) காஷ்மீர் ii) கல்கத்தா iii) லாகூர் iv) வேதாரண்யம் v) சம்பரான்

**IV. கீழ்காணும் வினாக்களுக்கு விரிவான விடையளி** **2×8=16**

43. அ) பெண்கள் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக. (அல்லது)
ஆ) 1857ஆம் ஆண்டின் பெரும் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.
44. கீழ்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்
i) கட்சி வளைகுடா ii) வட சர்க்கார் iii) கோதாவரி iv) பாலை மண்
v) கரும்பு விளையும் பகுதி vi) நிலக்கரி கிடைக்கும் பகுதி
vii) ஏதேனும் ஒரு சர்வதேச விமான நிலையம் viii) சோட்டா நாக்பூர் பீடபூமி

*(அல்லது)*

**கீழ்காணும் இடங்களை தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்கவும்.**
i) சதுப்பு நிலக்காடுகள் ii) வேடந்தாங்கல் iii) குமரிமுனை iv) பாம்பன் தீவு
v) கன்னியாகுமரி vi) மன்னார் வளைகுடா vi) மேட்டூர் அணை viii) காவேரி டெல்டா



www.freetnbooks.com | FREETNBOOKS